DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.35/2022**

**2024-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 20- ம் நாள் வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.07 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.சரவணன் இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 07 | தொழில் | - | உதவி ஆய்வாளர், ஊட்டி மத்திய காவல் நிலையம் |
| பெயர் | - | சதீஸ்குமார் | வட்டம் | - | |
| த/பெ | - | வேலுச்சாமி | சமயம் | - | |
| கிராமம் | - | பொள்ளாச்சி | வயது | - | 33/2024 |
| சாதி | - | | | | |

**<u>20-12-2024</u>**

**( எதிரி ஆஜரில்லை)(எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 -ன் கீழான மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது)**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது ஊட்டி நகர் மத்திய காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09-11-2020-ம் தேதி 12-15 மணிக்கு வால்பாறை காவல் நிலையத்தில் உதவி ஆய்வளாராக பணியில் இருந்தபோது முடீஸ் காவல் நிலைய பொறுப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தேன். அப்போது குமார்த/பெ. செல்லமுத்து, தாய்முடி எஸ்டேட் UD, முடீஸ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று நிலைய குற்ற எண் 71/2020, சட்டப்பிரிவுகள் 294(b) 324, 506(ii) IPC யின் வழக்கு பதிவு செய்தேன். **(அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் அன்றே மதியம் 01.10 மணிக்கு சம்பவயிடமான தாய்முடி எஸ்டேட் ud -வாசகசாலைக்கு சென்று சம்பவயிடத்தினை சாட்சிகள் விக்டர் அந்தோணி, சுரேஷ் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(அந்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** சம்பவயிடத்தை 14-15 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் எதிரிகள் புகார்தாரரை தாக்க பயன்படுத்திய மரப்பலகையான நாற்காலி கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். **(அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் சாட்சிகள் அன்பு, பாபு மற்றும் விக்டர் அந்தோணி, சுரேஷ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகளின் வாக்குமூலத்தின் அடிப்படையிலும் எனது புலன் விசாரணையிலும் சம்பவம் உண்மை என தெரிய வரவே எதிரிகளை தேடிச்சென்ற நிலையில் 09-11-2020-ம் தேதி 16-00 மணிக்கு தாய்முடி எஸ்டேட் ud யின் 1-ம் எதிரி சரத் என்பவரின் வீட்டு முன்பு நின்றுகொண்டிருந்தவரை காரணம் கூறி கைதுசெய்தும், அன்றே 16-30 மணிக்கு முடீஸ் கடை வீதியில் இருந்த 2-ம் எதிரி மணிகண்டன் என்பவரை காரணம் கூறி கைதுசெய்து எதிரிகளை நிலையம் கொண்டு வந்து பாராவசம் ஒப்படைத்து தக்க வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். சம்பவயிடத்தில் கைப்பற்றப்பட்ட தடய பொருளை படிவம் -91 -ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். **(அந்த படிவம் 91 (P.R.NO.5/2021) அ.சா.ஆ.10 ஆக**

**குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் 09-12-2020-ம் தேதி அ.சா.1-க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திருமதி. மகேஸ் ஆனந்தி என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றிதழ் பெற்றேன். **(அந்த விபத்து பதிவேடு அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** மருத்துவர் காயச்சான்றிதழில் கொடுங்காயம் என சான்று வழங்கியதால் வழக்கின் சட்டப்பிரிவினை 294(b), 324, 506(ii) இதசவிலிருந்து 294(b), 326, 506(ii) இதசவாக பிரிவு மாற்றம் செய்து அறிக்கை தாக்கல் செய்தேன் **(அந்த பிரிவு மாற்ற அறிக்கை அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** இத்துடன் எனது புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 294(b), 326, 506(ii)இதசவின் படி நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

நான் வால்பாறை காவல் நிலையத்தில் எந்த தேதியில் உதவி ஆய்வாளராக பணியில் சேர்ந்தேன் என்றால் 2020-ம் வருடம் மார்ச் மாதத்தில் பணியில் சேர்ந்தேன். தேதி நினைவில் இல்லை. வால்பாறை காவல் நிலையத்தில் எந்த தேதி வரை பணியில் இருந்தேன் என்றால் 2021-ம் வருடம் மார்ச் மாதம் வரை பணியில் இருந்தேன். தேதி நினைவில் இல்லை. வால்பாறை காவல் நிலையத்தில் நான் பணியில் இருந்தபோது முடிஸ் காவல் நிலைய பொறுப்பு அதிகாரியாக இருக்க எனக்கு யார் உத்தரவிட்டது என்றால் காவல் ஆய்வாளர் மகேஸ்வரி ஆவார். வால்பாறை காவல் நிலையத்தில் இருந்து முடீஸ் காவல் நிலையத்தில் பொறுப்பு அதிகாரியாக எந்த தேதியில் இருந்தேன் என்றால் தேதி சரியாக நினைவில் இல்லை. எனக்கு பொறுப்பு அதிகாரியாக வாய்மொழி உத்தரவு கொடுக்கப்பட்டதா, அல்லது எழுத்து மூலமாக உத்தரவு கொடுக்கப்பட்டதாக என்றால் வாய்மொழி உத்தரவிடப்பட்டது. வழக்கு சம்பவம் எந்த தேதியில் நடைபெற்றது என்றால் 08-11-2020-ம் தேதி 15-30 மணிக்கு நடந்ததாக உள்ளது. புகார் யார் கொடுத்தார் என்றால் புகார்தாரர் குமார் என்பவர் எழுத்துமூலமாக புகார் கொடுத்தார். சம்பவயிடத்திற்கு நான் நேரில் சென்று விசாரணை செய்தேனா என்றால் ஆமாம். எத்தனை மணிக்கு சம்பவிடம் சென்றேன் என்றால் 09-11-2020-ம் தேதி 13-10 மணிக்கு சம்பவம் இடம் நேரில் சென்றேன். பார்வை மகஜர் யார் தயார் செய்தேன் என்றால் நான் தான் தயார் செய்தேன். நான் சம்பவயிடம் செல்லவில்லை என்றாலும் பார்வை மகஜர் நான் தயார் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. நான் சம்பவயிடம் செல்லாமலேயே வழக்கு ஆவணங்களை முடீஸ் காவல் நிலையத்தில் தயார் செய்து வைத்திருந்ததை நான் கையொப்பம் செய்து நான் நேரடி விசாரணை மேற்கொள்ளாமல் தவறாக எதிரிக்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கு சம்பவத்திற்கும் சம்பந்தம் அல்ல என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.